
என் உபதேசத்தை
கேளுங்கள் ஜனங்களே
Give Ear, O My People, to My Teaching
Album 20 Song 4

Song 4 என் உபதேசத்தை கேளுங்கள் ஜனங்களே

Psalm 78 – Teaching from ancient wonders to next generations, not hiding God's deeds, so they hope in Him and keep His commands. Echoes Deuteronomy 6:6–9 (teach children diligently).

என் உபதேசத்தை கேளுங்கள் ஜனங்களே
என் வாயின் வசனங்கேட்க செவிகளைத் திறங்களேன்
என் உபதேசத்தை கேளுங்கள் ஜனங்களே
என் வாயின் வசனங்கேட்க செவிகளைத் திறங்களேன்

பூர்வகாலத்து மறைபொருள்களை வெளிப்படுத்துவேன்
என் வாயை உவமைகளால் திறந்திடுவேன்
என் உபதேசத்தை கேளுங்கள் ஜனங்களே
என் வாயின் வசனங்கேட்க செவிகளைத் திறங்களேன்

எங்கள் பிதாக்கள் எங்களுக்கு தெரிவித்ததையும்
கேள்விப்பட்டு அறிந்தவைகளையும் சொல்லிடுவேன்
அவர்கள் கண்முன்னே நடந்த அதிசயங்களை
அவர்கள் காதுகள் கேட்ட வார்த்தைகளை விவரிப்பேன்

KJC-DNN

என் உபதேசத்தை கேளுங்கள் ஜனங்களே
என் வாயின் வசனங்கேட்க செவிகளைத் திறங்களேன்

பின்வரும் சந்ததிக்கு எதையும் மறைக்கமாட்டேன்
கர்த்தர் செய்த அதிசயங்களை விவரித்திடுவேன்
யாக்கோபிலே சாட்சியை ஏற்படுத்தினார்
இஸ்ரவேலிலே வேதத்தை ஸ்தாபித்தார்

என் உபதேசத்தை கேளுங்கள் ஜனங்களே
என் வாயின் வசனங்கேட்க செவிகளைத் திறங்களேன்

கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்படிக்கு
இனிப் பிறக்கும் பிள்ளைகளுக்கும் சொல்லிடுவேன்
அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கும் அறிவிப்பார்கள்
அவர்களும் எழுந்து தங்கள் பிள்ளைகட்கு அறிவிப்பார்கள்

என் உபதேசத்தை கேளுங்கள் ஜனங்களே

என் வாயின் வசனங்கேட்க செவிகளைத் திறங்களேன்

இந்த உபதேசம் என்றும் மறையாதிருக்கும்
கர்த்தருடைய நாமம் தலைமுறை தலைமுறையாய்
பிரகாசிக்கும் – என்றென்றும் பிரகாசிக்கும்
என் உபதேசத்தை கேளுங்கள் ஜனங்களே!

KJC-DNN



“Give Ear, O My People, to My Teaching”

Album 20 Song 4